முருகப்பெருமான் துணை

**மகான் சடைய நாயனார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**20.07.2022**, புதன்கிழமை

1. மாதவ மூர்த்தியே அரங்கா
   மாதரும கீர்த்தியே தேசிகா
   பூதலம் எங்கிலும் உன் அவதார
   பெருமை சென்றிட மாற்றம் நிகழும்
2. நிகழுமென அருளாசி தன்னை
   நிலமதனில் சுபகிருது நள்ளிதிங்கள்
   வகைபட சதுர் திகதி புந்தி வாரம்
   (சுபகிருது வருடம் ஆடி மாதம் 04 நாள், 20.07.2022 புதன்கிழமை)
   வழங்குவேன் சடைய நாயனார் யானும்
3. யானும் உலகோர் நலமுற உரைப்பேன்
   உயர்வான ஞானப்பிறவியாக
   தானவரவர் பிறவிநிலை மாற்ற
   தரணியோர் ஞானவான் அரங்கன்
4. அரங்கன் காட்டும் சன்மார்க்க
   அருட்தயவு நெறிகளை
   வரங்களாக ஏற்று மக்கள்
   வணங்கித் தொடர்ந்து வர
5. வருகவே உலக மாயைகளை வெல்லும்
   வல்லமையும் பொறிபுலன் அடக்கமும்
   அறிவு சார்ந்த நடத்தையும் நற்குணமும்
   அறத்துடன் வாழும் பண்பும் செயல்பாடும்
6. செயல்பாடும் பெருகியே வரும் மக்களுக்கு
   சேவை நோக்கம் ஞானபலம் கூடும்
   தயவுடன் வாழ்ந்து மற்றவர்க்கும் உதவியே
   தர்மவானாக நிலைகள் உயர நேரும்
7. நேர்மைகொண்ட மக்களாய் நீதிமான்களாய்
   நிலவுலகோர் அரங்கஞானி ஆசியாலே
   வருமுலகில் முழுமைநிலை கண்டடைந்து
   வையகத்தை காக்கும் சக்தியாக மாறுவர்
8. மாறுதல் தருகின்ற மாதவ வேலியாக
   மக்களை காக்கின்ற மகா சக்தியாக
   ஆறுமுகப்பெருமான் அரங்கன் வடிவிலே
   அற்புதத்தை உலகினில் நிகழ்த்தி வர
9. வருகின்ற காலங்கள் அரங்கனின் சேவைக்கு
   வழிவிடும் வல்லமை கூட்டும் காலமாக இருக்க
   வருமுலகில் கலியுக மக்கள் எல்லாம்
   வணங்கி அரங்கன் நாமம் சொன்னால் போதும்

10. போதுமப்பா உலகம் பேரிடரை கடந்து
புகலுவேன் பாதுகாப்பு அமைதி காணும்
ஆதரவாய் வளர்ச்சியும் மாற்றங்களும்
அறிவிப்பேன் அனைத்துவித தேற்றங்களும்

11. தேற்றங்களும் உலகோர் கண்டடைந்து
தேசிகன் அருளால் தயவால்
மாற்றங்கள் உலகமெல்லாம் கண்டு
மனிதர்கள் ஆட்சி மகான்கள் ஆட்சியாக மாறும்
அருளாசி முற்றும் முற்றே

–சுபம்–